RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s1015

# சங்க இலக்கியம் காட்டும் விளிம்பு நிலைமக்கள்

க. ஜெயசீலன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, குருநானக் கல்லூரி, வேளச்சேரி, சென்னை-600042, தமிழ்நாடு, இந்தியா

# The Marginal Status of People as Shown in Sangam Literature

**K. Jayaseelan** [a, *]

[a] Department of Tamil, Guru Nanak College, Velachery, Chennai-600042, Tamil Nadu, India

* Corresponding Author:
jskavivendhan@gmail.com

Received: 14-09-2021
Revised: 03-06-2022
Accepted: 07-06-2022
Published: 12-08-2022

Check for updates

**ABSTRACT**

Tolkappiyam divides human society into four categories: kings, nobles, merchants, and agriculturalists. Over time, people developed various caste structures within the four groups. People are constantly creating/teaching some reason within themselves and living with the mindset of differentiating as high and low. Each group was/is in the mindset that they should have a group under them to do slave labour rather than think they are being enslaved by a group. The agriculturists did not get the social rights that were available to the king, nobles, and merchants. Sangam texts form the land-based communities. The land based communities came together for the barter system. However, they also had separate ideas of superior and inferior. There is a social structure based on professional systems of superiority and inferiority. Sangam texts reflect the position of people who lived a life of prosperity and the opposite position of people who lived a life of poverty. The occupations of the destitute to earn their living were considered despicable in those days. So those who do such professions are taught to be ignoble in society. This article sets out to consider them as marginalised people.

**Keywords:** Tholkappiyam, Ethnic Civilization, Possession, Crime, Ignorance, Wealth, Observation

## முன்னுரை

### தொல்காப்பியர் கால சமூகம்

பண்டைத் தமிழகத்தின் ஒடுக்கப்பட்ட மக்கள்திரள் சார்ந்த அமைப்பைக் குறித்து ஆராய முதன்மை ஆதாரமாக கிடைப்பவை இலக்கியங்களே. தமிழ்ச்சமூகத்தின் புராதனமான இனக்குழுச் சமூகங்களின் கலாச்சாரத்தின் அங்கமாக விளங்கிய பாணர் மரபும், அவற்றிலிருந்தும், அவற்றை விஞ்சியும் வன்முறைகளால் முடியாட்சிச் சமுதாயமும், அதன் அங்கமாகிவிட்ட புலவர் மரபும் தனித்துவமானதாக இயங்கின. குறிப்பாகப் பாணர்மரபு உருவான திணைவாரிக் குடிச்சமூகம் மூலதிராவிட நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் கொண்டிருந்தன. இத்தகைய இனக்குழு நாகரிகமும் கலாச்சாரமும் வேளாண் உற்பத்திக் காலகட்டத்திற்குள் வலிந்து நுழைந்து உடைமை வேட்கையுற்று வினையாற்றிய காலகட்டத்தை கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்தே அவதானிக்க முடிகிறது (Rajgowthaman, 2008).

ஒடுக்கப்பட்ட/தாழ்த்தப்பட்ட மக்கள் இலக்கியங்களில் தலைமை மாந்தர்களாக இடம்பெற முடியாது என்ற இலக்கியமரபு இருந்த அன்றையச் சூழலில் அவர்களைப் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் மிகஅரிதாகவே காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் மேலோர், கீழோர் என்ற சமூககட்டமைப்புக் குறித்த சிலதகவல்களை அறிய முடிகிறது.

கற்பியலில் திருமணம், ஒருகாலத்தில் அரசர், அந்தணர், வணிகர் ஆகிய மூவருக்கு மட்டுமே உரியதாக இருந்தது. பிற்காலத்தில்தான் கீழோராகிய வேளாளர்க்கும் உரியதாக மாறியது என்று குறிப்பிடுகிறது.

"மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணங்

கீழோர்க்காகிய காலமுமுண்டே"

இதிலிருந்து மேற்குறிப்பிட்ட மூன்று குலத்தினரின் ஏவலுக்குக் கட்டுப்பட்டுக் குற்றேவல் செய்த ஒரு பிரிவினர் சமுதாயத்தில் இருந்தனர் என்பது புலனாகிறது (Shanmugam Pillai, 2007).

பிரிவு பற்றிப் பேசும் அகத்திணையியல் அரசர், அந்தணர், வணிகர், என்ற மூன்று பிரிவினருக்கு மட்டுமே ஓதல், தூது ஆகிய பிரிவுகள் உரியன எனச் சுட்டுகின்றது.

"அவற்றுள்

ஓதலுந்தூது முயர்ந்தோர் மேன"

மேற்குறிப்பிட்ட நான்கு பிரிவினர்க்குமான மரபும் தொழிலும் வரையறுத்த மரபியல்,

"வில்லும் வேலும் கழலும் கண்ணியும்

தாரும் மாலையும் தேரும் மாவும்

மன்பெறு மரபின் ஏனோர்க்கும் உரிய" -என்கிறது அதனை அடுத்து,

"அன்னராயினும்இழிந்தோர்க்குஇல்லை" என்கிறது (Shanmugam Pillai, 2007)

இங்கு `இழிந்தோர் என்பதற்கு மன்னர் போலும் செல்வந்தராகி இழிகுலத்தோர் நாடாண்டார் ஆயினும் அவர்க்கு இது பொருந்தாது என்கிறார் பேராசிரியர். `இழிந்தோர் என்பதற்கு "நான்கு குலத்தினும் இழிந்தமாந்தர்" என இளம்பூரணர் உரை எழுதுகிறார்.

எனவே, பொருளாதார ஆதிக்கமும் சமூக மதிப்பும் கொண்டோர் ஒரு பக்கம்; அவர்களுக்கு அடிமைத் தொழில் செய்தோர் ஒருபக்கம் என்று அன்றையச் சமூகம் பிளவுபட்டுக் கிடந்தது என்பது புலனாகிறது. அடிமை, இழிந்தோர் என்ற சொற்கள் குற்றேவல் செய்தோரையே புலப்படுத்துகின்றன.

## சங்ககாலச் சமூகம்

தமிழகத்தில் ஆதிகுலங்களின் வேட்டைச்சமூகம், பின்பு மேய்ச்சல் சமூகம், வேளாண் சமூகம், தாய்வழி மற்றும் தந்தைவழிச் சமூகங்கள் எனத் தமிழ்ச் சமூகம் பல்வேறு படிநிலைகளைக் கடந்து வந்துள்ளது. சமூகம் என்பது செயல்பாடுள்ள ஒருகுழுவாகும். பல மனிதர்களைக் கொண்டு சமூகம் உருவாக்கப்பட்டிருப்பினும் சமூக அமைப்பில் தனிமனித நலன்கள் சமூகநலன்களுக்கு உட்பட்டு அமைகின்றன. சமூகத்தின் ஒவ்வொரு செயல்பாடும் அச்சமூக உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் பிரித்து அளிக்கப்படுகிறது. அவ்வாறு பிரித்தளிக்கப்பட்ட செயல்பாடுகளின் வழியாக சாதியம் உருக்கொண்டது.

உழைக்கும் மக்களின் முதன்மை இல்லாது உலகம் இல்லை என்பதை நாம் உணராதவர்களல்ல. சங்க இலக்கியம் அரசு, ஆளுமை, உழைப்பு, அடிமை, என வகுக்கப்பட்டும் தொழிலின் வகைப்பாட்டிலேயே வருணப்பாகுபாடு பிரிக்கப்பட்டும் மக்களைமேல், கீழ் எனத் தமிழ்ச்சமூகம் நான்கு வருணத்தோடு இணைக்கப்பட்டது என்பதும் அதனுள் சாதிய முரண்பாடு இருந்ததென்பதும் கண்கூடு. அதன் துவக்கத்தினைச் சங்க இலக்கியத்துள்ளும் காணமுடியும் (Jothi Rani, 2004).

சங்ககால அடிதட்டுமக்கள் தாங்கள் செய்யும் தொழிலையே நம்பி இருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒருதொழில் துணையாக இருந்தது. குறிஞ்சி நிலத்திலே குறவர், முல்லை நிலத்திலே இடையர், மருதநிலத்திலே உழவர், நெய்தல் நிலத்திலே பரதவர் என நிலஅமைப்பிலே நிபந்தனையின்றிக் கிடைத்ததைக் கொண்டு வாழ்க்கை அமைத்தனர். அந்தணர், அரசர், அளவர், இடையர், இயவர், உப்புவணிகர், உழவர், எயிற்றியர், கடம்பர், கடைசியர், கம்மியர், களமர், கிணைஞர்,

கிணைமகள், குறவர், குறத்தியர், குறும்பர், கூத்தர், கொல்லர், கோசர், தச்சர், துடியர், தேர்ப்பாகன், நுளையர், பரதவர், பறையர், பாடினி, பாணர், பாணிச்சி, புலையர், பூண்செய்கொல்லர், பூவிலைப்பெண்டு, பொதுவிலைமகளிர், பொருநர், கடையர், மழவர், மறத்தியர், மறவர், மோரியர், யவணர், யாழ்ப்புலவர், யானைப்பாகர், யானைவேட்டுவர், வடவடுகர், வணிகர், வலைஞர், விலைப்பெண்டிர், வேடர் எனப்பல தொழிற் சங்கச் பிரிவுகள் சமூகப் பாகுபாட்டில் காணப்படுகின்றன. அத்தொழிற் பிரிவுகள் சமூகத்தில் ஏற்றதாழ்வை உருவாக்கின.

## பறையர், துடியர்

சங்க இலக்கியங்களில் துடியர், பறையர் என்போர் குறித்த பதிவுகள் உள்ளன. துடி, பறை என்னும் தோல்கருவிகளை இசைபவர்கள் "இழிசினர்" என்றும் "இழிபிறப்பாளர்" என்றும் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

"கட்டில் நிணக்கும் இழிசினன் கையது

போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று"

"இழிபிறப்பாளன் கருங்கை சிவப்ப

வலிதுரந்து சிலைக்கும் வன்கண்கடுந்துடி"

"துடியெறியும்புலைய!

எறிகோல் கொள்ளும் இழிசின"

"பூக்கோல் இன்று என்று அறையும்

மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே"

இழிசினர் என்றும் இழிபிறப்பாளர் என்றும் அழைக்கப்படும் இவர்களின் தொழில் பறை மற்றும் துடியறைதல், தோல் பொருட்களைப் பழுதுபார்த்தல் என்று தோல்தொழிலோடு ஒட்டியதாகத் தெரிகிறது (Parimanam, 2004a). தற்காலத்திலும் பறையர், சக்கிலியர் போன்ற பிரிவினர் தோல்கருவிகளுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றனர் என்பது நோக்கத்தக்கதாகும்.

## புலையன் - புலைத்தி

புலையன் என்பது ஏசத்தக்க இழிசொல்லாக இலக்கியங்களில் சிலஇடங்களில் கையாளப்படுகிறது. நாளாவட்டத்தில், புலையராக ஒதுக்கப்பட்ட புறசாதிகள் பெருகின. அவர்கள் வடபுலத்தைக் காட்டிலும் அதிகமாக தென்னாட்டில் அல்லலுற்றனர். இழிந்தவை என்று கருதப்பெற்ற தொழில்களைப் புரிந்தும் பண்ணையாட்களாகப் பயிர்த்தொழில் புரிந்தும் ஊருக்கு அப்பாலுள்ள சேரிகளில் காலந்தள்ளினர். (Ramakrishnan, 1971) புலையர் பற்றிய செய்திகளை சங்க இலக்கியங்கள் கீழ்க்கண்டவாறு பதிவுசெய்துள்ளன.

"போகிப் புலையன் பெருந்துடி கறங்க" புலையர் யானைமீது துடி முழக்கியதைக் கூறுகிறது. அதாவது படையை வழிநடத்த அல்லது மன்னன் வருவதை அறிவிக்க யானைமீது பெரும் சத்தத்தையும் அதிர்வையும் எழுப்பும் பறையை முழக்குவர் (Parimanam, 2004b).

"புலையன் ஏவப்புன் மேல் அமர்ந்துண்டு" புலையர் வேலையாட்களோடு ஈமச்சடங்கு செய்து சுடுகாட்டில் படையல் இட்டதைக் கூறுகிறது (Parimanam, 2004a). "புலையன் பேழ் வாய்த் தண்ணுமை" என்று புலையர் வைத்திருந்த அகன்ற வாயினையுடைய மத்தளம் போன்ற இசைக்கருவி (தண்ணுமை) குறிக்கப்பட்டுள்ளது (Parimanam, 2004a).

"பிரியா கவி கை புலையன் தன் யாழின்

இகுத்த செவிசாய்த்து" புலையர் யாழ்மீட்டியது பற்றி கூறுகிறது. இவற்றிலிருந்துபறை, துடிபோன்ற இசைக்கருவிகளைப் புலையர் பயன்படுத்தினர் என்பதை அறிய முடிகிறது (Parimanam, 2004c).

புலையர் குலப்பெண் பற்றி கூறும் போது,

"உடைஓர் பான்மையின் பெருங்கை தூவாவறன் இல்புலைத்தி"

உடைகளை தரம்பிரித்து வெளுக்கும்பு லைத்தி என்கிறது (Parimanam, 2004b).

"நலத்தகைப் புலைத்தி பசைதோய்த் தெடுத்துத்

தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட

நீரிற் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்"

நல்ல குணங்களை உடைய புலைத்தி ஆடைகளுக்கு பசை தடவி திரியாக முறுக்கி குளத்தில் துவைத்ததுபற்றி கூறுகிறது (Parimanam, 2004d).

"ஆடை கொண்டு, ஒலிக்கும், நின் புலைத்தி காட்டு என்றாளோ"

புலையர் பெண் துணி துவைக்கும் தொழில் செய்ததை கூறுகிறது (Parimanam, 2004c).

"பசை கொல் மெல் விரல், பெருந் தோள், புலைத்தி"

என்று அகநானூறும் இதையே கூறுகிறது (Parimanam, 2004e).

"மாதர்ப் புலைத்தி விலையாகச் செய்தது ஓர்

போழின் புனைந்த வரிப் புட்டில்"

என்று புலைத்தி பிண்ணிய கூடை பற்றி வருகிறது (Parimanam, 2004c). இவ்வாறு புலையன்துடி, மத்தளம், யாழ் போன்ற இசைக்கருவிகளை இசைப்பவனாகவும் பிணங்களை அடக்கம் செய்பனாகவும் அறியப்படுகின்றனர். இன்றைக்கும் பெரும்பாலும் இறப்பு நிகழ்வில் பறையடிப்பவர் பறையர் இனத்தை சார்ந்த வராகத்தான் இருக்கின்றார். பிணங்களை அடக்கம் செய்பவர்களும் அவ்வினத்தை சார்ந்தவரே. அவர்களை தற்போது வெட்டியான் என்ற சொல்லால் அழைக்கின்றனர். புலைத்தி பொரும்பாலும் துணிதுவைக்கும் தொழிலைச் செய்பவளாகவும் சில இடங்களில் கூடைபிண்ணுதல் போன்ற பிறத்தொழில்களைச் செய்பவளாகவும் அறியப்படுகிறாள்.

## நிலமற்ற வேளாண் கூலிகள்

சங்க இலக்கியங்களில் புலையர், பறையர், கடைசியர் என்று சுட்டிச் சொல்லப்பட்டவர்கள் தாழ்ந்த சாதியினராக இருந்திருக்க வேண்டும். இதுபற்றி உறுதியாகக் கூறமுடியாவிடினும் சிலயூகங்களை முன்வைக்கச் சங்க இலக்கியம் இடமளிக்கிறது. நெல்கதிரை அறுவடை செய்யும் மக்கள் பறையை முழக்கிக்கொண்டே அறுவடை செய்ததாக இலக்கியங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ

கண்மடல் கொண்ட தீந்தேன் இரிய"

"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ

பழனப் பல்புள் இரிய"

"வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை

பன்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்"

"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ

செங்கண் எருமை இனம்பிரி பொருத்தல்"

ஆகியன அவற்றுக்கு சான்று பகர்கின்றன (Parimanam, 2004f).

பறை அறைபவர்கள் இழிந்தவர்கள், புலையர்கள் என்னும்போது, இங்கு அறுவடைத் தொழிலில் ஈடுபட்டவர்களும் இழிநிலை மக்களாக இருந்திருக்க வேண்டும். மதுரைக்காஞ்சி, குறுந்தொகை ஆகியவற்றில்

"ஒலிந்த பகன்றை விளைந்த கழனி

வன்மைவினைநர் அரிபறை"

"கைவினை மாக்கள் தம் செய்வினை முடிமார்"

வலிய கையினால் தொழில் செய்பவர்கள் எனச் சுட்டப்படுவது, அடிமை தொழில் செய்து உழைத்து உழைத்து கைகள் கடினப்பட்டுப் போவதைக் குறிக்கிறது (Parimanam, 2004d). அதே போன்று வேறுசில இடங்களில் வயல்களில் களைபறிப்பவர்களும் அவர்களைச் சார்ந்த பெண்களாகவே இருந்திருக்கவேண்டும்.

கொண்டையணிந்த கூந்தலையுடைய கடைச்சியர், களைபறிப்பர். வயலில் கிடைத்த வாளை மீனைச் சமைத்து வெண்சோற்றுடன் கடைச்சியருடன் வலியகைகளை உடைய உழவரும் விலாபுடைக்க உண்டனர் என்பதை

"கொண்டைக் கூழைத் தண்தழைக் கடைசியர்

சிறுமாண் நெய்தல் ஆம்பலொடு கட்கும்

மலங்கு மிளிர் செறுவின் தளம்புதடிந்து இட்ட

பழன வாளைப் பரூஉக்கண் துணியல்

புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை ஆக

விலாப் புடை மருங்கு விசிப்ப மாந்தி

நீடுகதிர்க் கழனிச் சூடுதடு மாறும்

வன்கை வினைஞர்" என்று புறநானூறு கூறுகிறது (Parimanam, 2004a).

மேற்குறிப்பிட்டோர் இன்றைய பள்ளர், பறையர் சாதியினரின் முன்னோர்களாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வருவதற்கான ஆதாரங்கள் இடைக்கால இலக்கியங்களிலும் காணப்பெறுகின்றன.

சீவகசிந்தாமணி ஏமாங்கத நாட்டின் வளம்பற்றிக் கூறும்போது, நஞ்சை நிலத்தில் நிகழும் விவசாய உற்பத்திபற்றி விரிவாகப் பேசப்படுகிறது. அங்கு உழவு முதல் அறுவடை ஈறாக உள்ள வேளாண்தொழிலைச் செய்பவர்கள், `கடைசியர்' என்றே அழைக்கப்படுகின்றனர் என்பதை

"சேறு அமை செறுவினுள் செந்நெல் வான் முளை

வீறொடு விளைக எனத் தொழுது வித்துவார்

நாறு இது பதம் எனப் பறித்து நாள் செய்வார்

கூறிய கடைசியர் குழாம் கொண்டு ஏகுவார்" என்னும் பாடல்வழி அறியமுடிகிறது (Rajaram, 2008).

சிலம்பு, மணமுள்ள மலர்களையுடைய ஆம்பல் முதலியவற்றைப் பறித்தெறிந்து, அங்ஙனம் பறித்தவிடத்தே முடியின் நாற்றைப்பகிர்ந்துநட்டு, வளைந்த வளையலணிந்த தோளின்கண்ணும் மார்பின் கண்ணும் படிந்தசேறாடு அழகுபெறத்தோன்றி சிலவாகிய மொழியினையுமுடைய கடைசியர் என்கிறது.

"கடி மலர் களைந்து, முடி நாறு அழுத்தி,

தொடி வளைத் தோளும் ஆகமும் தோய்ந்து,

சேறு ஆடு கோலமொடு வீறு பெறத் தோன்றி,

செங் கயல் நெடுங் கண் சில் மொழிக் கடைசியர்

வெங் கள் தொலைச்சிய விருந்தின் பாணியும்" இவை மேற்குறிப்பிட்ட செய்திகளுடன் பொருந்திப்போவதாக அமைகின்றன (Venkatasamy Nattar, 2009).

அரண்மனைகளிலும் ஆண்டைகளின் வளமனைகளிலும் ஆடவரும் மகளிருமான அடிமைகள் பலர் பணியமர்த்தப்பட்டிருந்தனர். மகளிர் சமையல் செய்தல், சலவை செய்தல் ஆகிய தொழில்களுடன் நெல் குற்றுவோராகவும் பணிசெய்தனர். இதனை,

"அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்

தொடிமாணுலக்கைப்பரூஉக் குற்றரிசி"

என்று புறநானூறு கூறுகிறது (Parimanam, 2004a).

மேற்குறித்த தகவல்களை உற்று நோக்கினால் உடல் உழைப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டவர்கள் பொருளாதாரத்தில் கீழ்நிலையில் இருந்தவர்களாக/ஒடுக்கப்பட்ட மக்களாக இருந்திருக்கின்றனர். இவர்களின் உழைப்பைப் பெற்றுக்கொண்டு அவர்களை சமமாக நடத்தாத ஒருபிரிவினர் சமூகத்தில் இருந்திருக்கின்றனர் என்பதை உணரமுடிகிறது.

அதேபோன்று பள்ளு இலக்கியங்களிலிருந்து பள்ளர் நிலை எத்தகைய அளவு விளிம்புநிலைக்குத்தள்ளப்பட்டது என்பதை நாம்உணரமுடிகிறது. ஆண்டை - அடிமை என்ற முறைக்கான ஆவணம் பள்ளு இலக்கியங்களாகும். கோயில் நிலங்களில் பண்ணையடிமைகளாக இருந்த பள்ளர்களின் வாழ்க்கை இலக்கியத்தின் பாடுபொருளாக்கப்பட்டது என்பது இயல்பான நிகழ்வு அன்று. அக்காலக்கட்டத்தில் நிகழ்ந்த சமூக அசைவியக்கங்களே இதற்குக் காரணம் என்பதை மனதில் கொள்ளவேண்டும். பள்ளு இலக்கியங்கள் காப்பியங்களைப் போன்று கற்பனையான பண்பாட்டு வெளியைக் கொண்டமையவில்லை. அவை யதார்த்த வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு அடிமைச் சமுதாயத்தில் உழைப்பாளி மக்கள் ஆளும் வர்க்கத்தினரிடம் சிக்கிச் சீரழிந்தனர் என்பது தமிழிலக்கியக் குறிப்புகளில் தெளிவாகத் தெரிகிறது.

## முடிவுரை

நாடோடியாக திரிந்த மனிதன் நிலையான ஓர்இடத்தில் குடியமர்ந்த போது உடைமைச்சமூகம் உருவானது. தான் வசித்த இடத்திற்கு அருகில் உள்ள நிலங்களைத் தனதாக்கிக் கொள்ள எத்தனித்த போது, நிலங்களை பிரித்துக்கொள்வதில் அவர்களுக்குள் ஏற்பட்ட போட்டியில் வலிமையுள்ளவன் தனக்குத் தேவையான நிலங்களைக் கைப்பற்றினான். வலிமையற்றவன் வலிமையுள்ளவன் நிலத்தில் உழைக்கத் தலைப்பட்டான். தொடக்ககால சமூகத்தில் உடல்வலிமை சார்ந்து உயந்தவன், தாழ்ந்தவன் என்ற நிலை தோன்றியிருக்கவேண்டும். பின்னர் அதுதொழில் சார்ந்த நிலைக்கு மாற்றம்கொண்டு, சாதியம் சார்ந்த நிலைக்குப் பரிணமித்திருக்கவேண்டும். தொல்காப்பிய, சங்க இலக்கியக்கால சமூகம் மேலோர், கீழோர் ஆகிய பாகுபாட்டுடன் வாழ்ந்த மக்கள்சார்ந்த பதிவுகளை முன்வைக்கின்றன. பறையர், துடியர், புலையன், புலைத்தி போன்றோர் இழிந்தோர் என்ற பொருண்மையிலேயே கையாளப்பட்டுள்ளனர். அவர்கள் அன்றைய காலகட்டத்தில் செய்த தொழில்கள் இன்றைக்கும் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட/விளிம்புநிலை மக்களாலேயே செய்யப்படுகின்றன. இடைப்பட்ட காலத்திலும் அத்தொழில்களை வேறு சமூகத்தினர் செய்ததாகப் பதிவுகள் இல்லை. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நோக்குகையில் சங்ககால சமூகமும் ஏற்றத்தாழ்வு உடைய சமூகமாகவே இருந்திருக்கவேண்டும் என்பதை அறிய முடிகிறது.

## References

Anbuselvan, T., (2010 Pandaiya Tamilarin Arasiyal Amaippu Sinthanaigal, Bharathi Puthagalayam, Chennai, India.

Baktavatchala Bharathi (2005), Manudaviyal Kotpadugal, Adaiyalam Publications, Chennai, India.

Jothi Rani, K.A., (2004) Tamil Ilakkiyangalil Samuthaya Adaiyaalam, Kavya Pathippagam, Chennai, India.

Parimanam, A.Ma., (2004a) Purananuru, New Century Book House, Chennai, India

Parimanam, A.Ma., (2004b) Natrinai, New Century Book House, Chennai, India

Parimanam, A.Ma., (2004c) Kalithogai, New Century Book House, Chennai, India

Parimanam, A.Ma., (2004d) Kurunthogai, New Century Book House, Chennai, India

Parimanam, A.Ma., (2004e) Agananooru, New Century Book House, Chennai, India

Parimanam, A.Ma., (2004f) Madurai Kanji, New Century Book House, Chennai, India

Rajaram, D., (2008) Civaka Cintamani, Mulai Nilaiyam, Chennai, India.

Rajgowthaman, (2008) Tamizh Chamookatil Aramum Atralum, Vidiyal Pathippagam, Chennai, India.

Ramakrishnan, S., (1971) Indhiya Panpadum Tamilagamum, Meenakshi Puthaka Nilayam, Madurai, India.

Shanmugam Pillai, M., (2014) Tholkappiyam Porulathikaram, Mulai Nilaiyam, Chennai, India.

Venkatasamy Nattar, Na.Mu., (2018) Silapathikaram Moolamum Uraiyum, 1st Edition, Gowra Agency, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License